03.01.2025 O.S. 390 of 2018 வா.சா4 லட்சுமணன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். வழக்கு எந்த சர்வே எண்ணுக்கு நடைபெற்று வருகிறது என்றால் 571/11 ஆகும். என்னை சாட்சியம் அளிக்க ராமலட்சுமி அழைத்து வந்தார் என்றால் சரிதான். ராமலட்சுமிக்கு நான் உறவுமுறையில் சித்தப்பா வேண்டும் என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் நான் ராமலட்சுமிக்கு சித்தப்பா என்பதை மறைத்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நிரூபண வாக்குமூலத்தை நான் வாசித்து பார்த்து கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் தயார் செய்து வைத்து இருந்ததில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் 75வருடமாக தபசில் சொத்து அமைந்துள்ள ஊரில் வசித்து வருகிறேன் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக சொல்லுகிறேன். நான் தபசில் சொத்து அமைந்துள்ள ஊரில் 15 ஆண்டுகள் சமுதாய தலைவராக இருந்தேன் என சொல்லியுள்ள நிலையில் அது எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை ஊர் தலைவராக இருந்தேன் என்பதை சொல்லவில்லை என்றால் 2010ம் ஆண்டில் இருந்து தற்போது வரை ஊர்தலைவராக உள்ளேன். உயிலை நான் நேரில் படித்து பார்த்து கிடையாது என்றால் சரியல்ல. படித்து பார்த்துள்ளேன். உயிலை எத்தனை நாட்களுக்கு முன்பு படித்து பார்த்தேன் என்றால் 5,6 வருடத்திற்கு முன்பு படித்து பார்த்தேன். வழக்கு சொத்திற்கு கிழக்கில் யார் உள்ளார்கள் மேற்கில் யார் உள்ளார்கள் என்றால் கிழக்கில் பிரதிவாதி உள்ளார். மேற்கு பக்கம் வாதி உள்ளார். வழக்கு சொத்தில் ஒரு பகுதியை வாதிகள் பிரதிவாதியிடமிருந்து எழுதி வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி ஞாபகமில்லை. நான் ஊர் தலைவராக இருந்து வாதிக்கும், பிரதிவாதிக்கும் இந்த பிரச்சனை சம்பந்தமாக பேசி பார்த்தேனா என்றால் பஞ்சாயத்திற்கு வந்தார்கள். அவரவர்கள் இடத்தில் அவரவர்கள் இருந்து கொள்ளுங்கள் என்று சொல்லி முடித்து விட்டேன். பிரதிவாதி குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாக பிரிவினை பற்றி

எனக்கு தெரியாது என்றால் சரிதான். தபசில் சொத்தில் யார் உள்ளார்கள் என்றால் வாதி ராமலட்சுமி அனுபவம் செய்து வருகிறார். பிராது தபசில் சொத்தை வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்பதை நிரூபணம் செய்வதற்கான ஆவணம் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு சொத்து பிரதிவாதியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தபசில் சொத்தை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் நான் பார்த்து 6 மாதம் இருக்கும். நான் தபசில் சொத்து ஊரில் தான் வசித்து வருகிறேன். என் வீட்டிற்கும், தபசில் சொத்திற்கும் 30மீட்டர் தூரம் இருக்கும். தபசில் சொத்து கம்பி வேலி அமைக்கப்பட்டு பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.